ஶ்ரீ:

ஶ்ரீ க்ருஷ்ணாய பரப்ரஹ்மணே நம:.

ஶ்ரீக்ருஷ்ணத்வைபாயனாய நம:.

# ஶ்ரீ மஹாபாரதம்.

## மஹாப்ரஸ்தானிகபர்வம்.

### முதலாவது அத்யாயம்.

[1] நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம் ।
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத் ॥

(யுதிஷ்டிரர் பரீக்ஷித்துக்கு முடிசூட்டி யுயுத்ஸுவினிடம் ராஜ்யத்தை ஒப்பித்து நகரவாஸிகளிடம் அனுமதிபெற்றுத் தம்பியருடனும் த்ரௌபதியுடனும் நாயுடனும் புறப்பட்டதும், அர்ஜுனன் அக்னியின் சொற்படி வில்லையும் தூணியையும் கடலில் போட்டதும்.)

ஜனமேஜயர், "இவ்விதம் விருஷ்ணிகள் அந்தகர்கள் இவர்களின் குலத்தில் நேர்ந்த உலக்கைச் சண்டையைக் கேட்டுக் கிருஷ்ணரும் அவ்வாறு விண்ணுலகம் அடைந்துவிட்டபொழுது, பாண்டவர்கள் என்ன செய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத் தொடங்கினார்.

"கௌரவரான யுதிஷ்டிரராஜர், இவ்விதம் விருஷ்ணிகளின் பெரிய நாசத்தைக் கேட்டுத் துறந்து செல்லுவதில் எண்ணங்கொண்டு அர்ஜுனனை நோக்கி, 'சிறந்த புத்தியுள்ளவனே! காலமானது எல்லாப் பிராணிகளையுமே [2]பக்குவம் செய்கிறது; (ஆகையால்,) நான் காலபாசத்

---

1. இதன் உரை விசேஷங்களை ஆதிபர்வம் முதற்பக்கம் குறிப்பில் காண்க.
2. முடிவுபெறச் செய்கின்றதென்பது கருத்து.

(திற்கு வசப்பட்டு மரிப்பு) தை அங்கீகரிக்கிறேன். நீயும் ஆலோசித்துப் பார்' என்ற வாக்யத்தைச் சொன்னார்.

இவ்வாறு சொல்லக்கேட்ட அந்தக் குந்தியின் குமாரனான அர்ஜுனனோ, 'காலமானது நித்யமாக உள்ளதுதான்' என்று சொல்லிப் புத்திசாலியும் மூத்த தமயனுருமான யுதிஷ்டிரருடைய அந்த வாக்கியத்தை ஏற்றுக்கொண்டான். அர்ஜுனனுடைய கருத்தை அறிந்து பீமஸேனனும், அவ்வாறே இரட்டையரும், அர்ஜுனன் சொன்ன வாக்கியத்தை ஏற்றுக்கொண்டார்கள். பிறகு, யுதிஷ்டிரர் தர்மத்தில் விருப்பங்கொண்டு துறந்து செல்வதற்காக வைஸ்யாபுத்ரனான யுயுத்ஸுவை வருவித்து ராஜ்யமுழுதையும் அவனிடத்தில் ஒப்பித்தார். பாண்டவர்களுள் மூத்தவரான யுதிஷ்டிரராஜர் தமது ராஜ்யத்தில் பரிக்ஷித்தை அரசனாக அபிஷேகஞ்செய்து மிக்க துயரத்துடன் ஸுபத்ரையை நோக்கி, 'உன் புத்திரனுடைய புத்திரனான இவன் கௌரவர்களுக்கு அரசனாவான். யாதவர்களுள் மிச்சமான வஜ்ரன் (அவர்களுக்கு) அரசனாகச் செய்யப்பட்டான். ஹஸ்திநாபுரத்தில் அரசனாகவிருக்கும் பரீக்ஷித்தும் இந்திரப்ரஸ்தத்தில் அரசனாகவிருக்கும் யாதவனான வஜ்ரனும் உன்னால் ரக்ஷிக்கப்படத்தக்கவர்கள். [1]அதர்மத்தில் மனத்தைச் செலுத்தாதே' என்று சொன்னார். தர்மாத்மாவான அந்தத் தர்மராஜர் இவ்விதம் சொல்லிவிட்டு, அப்பொழுது தம்பியர்களுடன் புத்திசாலியான வாஸுதேவருக்கும் விருத்தரான மாதுலருக்கும் பலராமர் முதலானவர்களுக்கும் சோம்பலின்றி ஜலதர்ப்பணஞ்செய்து எல்லாரையும் உத்தேசித்து ச்ராத்தங்களையும் விதிப்படி செய்தார். யுதிஷ்டிரர் முயற்சி செய்து சார்ங்கபாணியான மாதவரை உத்தேசித்து அவரைச் சொல்லிக்கொண்டு வியாஸரையும் நாரதரையும் தபோதனரான மார்க்கண்டேயரையும் பாரத்வாஜரையும் யாஜ்ஞவல்க்யரையும் ருசியுள்ள போஜனத்தைப் புஜிக்கச் செய்தார். அப்பொழுது ரத்தினங்களையும் வஸ்திரங்களையும் கிராமங்களையும் ரதங்களையும் ஸ்திரீகளையும் பிராம்மணச்ரேஷ்டர்களுக்கு லக்ஷக்கணக்காகக் கொடுத்தார். பரதர்களில் சிறந்தவனே! அப்பொழுது, பரதச்ரேஷ்டரான யுதிஷ்டிரர் பட்டணத்தார்களால் பூஜிக்கப்பட்டவரும் குருவுமான கிருபரை அழைத்து ஆஸனத்தில் இருக்கச்செய்து பூஜித்துச் சிஷ்யனான பரிக்ஷித்தை அவரிடம் கொடுத்தார். பிறகு, ராஜரிஷியான யுதிஷ்டிரர் எல்லா ஜனங்களையும் வருவித்-

1. 'அவர்களை விட்டுத் தங்களுடன் வருவது அதர்மமாகும்' என்பது கருத்து.

னுத் தாம் செய்ய விரும்பியதை முழுதும் சொன்னார். பட்டணத்தார்களும் தேசத்தார்களுமான அந்த ஜனங்கள், அவருடைய வார்த்தையைக் கேட்டவுடன், மிக்க மனத்துயரமுற்று அந்த வார்த்தையை ஸந்தோஷிக்கவில்லை. அப்பொழுது, அவர்கள் அந்த அரசரை நோக்கி, 'இவ்விதம் செய்யக்கூடாது' என்று சொன்னார்கள். காலத்தினுடைய மாறுதலின் தர்மத்தை உணர்ந்தவரான யுதிஷ்டிரராஜர் அவ்வாறு செய்யவில்லை. பிறகு, தர்மாத்மாவான யுதிஷ்டிரர், பட்டணத்தையும் தேசத்தையும் இருப்பிடமாகக் கொண்ட ஜனங்களிடம் அனுமதியைப் பெற்றுக்கொண்டு கிருஷ்ணரும் சென்றுவிட்டபடியால் (தாமும்) செல்ல எண்ணங்கொண்டார். (தற்காலத்தில்) நிலத்திற்குடையவன், முன்னே உடையவனாயிருந்தவன், அவ்வூரரசன் இவர்களுக்கு ஒரே ஸமயத்தில் தனத்தில் இச்சையற்று நிலத்தை வாங்கினவனோடு சச்சரவு உண்டாகவே, ஸஹதேவன் கலியுகம் வந்துவிட்டதென்றறிந்து சிரித்துக்கொண்டு, 'தர்மம் நசித்து விட்டது. ஸங்கரம் வந்துவிட்டது' என்று யுதிஷ்டிரராஜரிடம் சொன்னான். குருகுலத்தில் தோன்றியவரும் தர்மபுத்திரருமான யுதிஷ்டிரராஜர் அதைக்கேட்டு மனவருத்தமுற்று, 'நான் ஜீவித்திருப்பது போதும்' என்றுசொல்லிச் சரீரத்தினின்று ஆபரணங்களைக் கழற்றிவிட்டு மரப்பட்டைகளை எடுத்துக்கொண்டார். ராஜரே! பீமஸேனனும் அர்ஜுனனும் நகுலனும் ஸஹதேவனும் புகழ்பெற்றவளான திரௌபதியுமாகிய எல்லாரும் அவ்வாறே மரப்பட்டைகளை உடுத்துக்கொண்டார்கள். பரதச்ரேஷ்டரே! புருஷச்ரேஷ்டர்களான அவர்கள் எல்லாரும் அக்னியை விடுங்காலத்தில் முடிவில் செய்யத்தகுந்த இஷ்டியைச்செய்து அக்னிகளை (ஆத்மஸமாரோபணஞ்செய்து) ஜலத்தில் போட்டுவிட்டுப் புறப்பட்டார்கள். பிறகு, எல்லாஸ்திரீகளும், முன் சூதாட்டத்தில் ஜயிக்கப்பட்டுப் புறப்பட்டதுபோலப் புறப்பட்டவர்களும் திரௌபதியை ஆறாமவளாகக் கொண்டவர்களுமான புருஷச்ரேஷ்டர்களைப்பார்த்து உரக்க அழுதார்கள். யுதிஷ்டிரருடைய கருத்தை அறிந்தும் விருஷ்ணிகளுடைய நாசத்தைப் பார்த்தும், எல்லாப் பிராதாக்களுக்கும் செல்லும் விஷயத்தில் ஸந்தோஷமுண்டாயிற்று. ஐந்து பிராதாக்களும் ஆறாமவளான திரௌபதியும் ஏழாவதான ஒரு நாயும் ஆகிய இவர்களுள், யுதிஷ்டிரராஜர் தாம் ஏழாமவராகி ஹஸ்தினாபுரத்தினின்று புறப்பட்டார். பட்டணத்து ஜனங்களும் எல்லா அந்தப்புரஸ்திரீகளும் நெடுந் தூரம் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். ஆனாலும், ஒருவனாவது அவரை, 'திரும்பும்' என்று சொல்ல முடியவில்லை.

பிறகு, நகரவாஸிகளான எல்லாமனிதர்களும் திரும்பினார்கள். கிருபர் முதலானவர்கள் யுயுத்ஸுவைச் சூழ்ந்துகொண்டார்கள். கௌரவரே! நாககன்னிகையான உலூபியானவள் கங்கையில் பிரவேசித்தாள். சித்ராங்கதையானவள் மணலூரபுரத்தை நோக்கிச் சென்றாள். மிச்சமுள்ள மற்றத்தாயார்கள் பரிக்ஷித்தைச் சூழ்ந்துகொண்டார்கள். கௌரவரே! பிறகு, மஹாத்மாக்களான பாண்டவர்களும் புகழ்பெற்றவளான திரௌபதியும் உபவாஸமிருந்துகொண்டு கீழ்த்திசையை நோக்கிச் சென்றார்கள். யோகத்தோடு கூடினவர்களும் மஹாத்மாக்களும் ஸந்யாஸ தர்மத்தை அடைந்தவர்களுமான அவர்கள் பலதேசங்களையும் நதிகளையும் ஸமுத்திரங்களையும் கடந்து சென்றார்கள். முதலில் யுதிஷ்டிரரும் அவருக்குப்பின் பீமஸேனனும் அவனுக்குப்பின் அர்ஜுனனும் (அவனுக்குப்பின்) முறையாக நகுல ஸஹதேவர்களும் சென்றார்கள். பரதஸ்ரேஷ்டரே! (அவர்களுக்குப்) பின், சிறந்த இடையுள்ளவளும் கருமைநிறமுள்ளவளும் தாமரை இதழ்போன்ற கண்களுள்ளவளும் ஸ்திரீகளுள் சிறந்தவளுமான திரௌபதியானவள் சென்றாள். வனத்தைக் குறித்துப் புறப்பட்டவர்களான பாண்டவர்களை ஒரு நாய் தொடர்ந்து சென்றது. அந்த வீரர்கள் கிரமமாக [1]லௌஹித்யம் என்னும் ஸமுத்திரத்தை அடைந்தார்கள். மஹாராஜரே! அர்ஜுனன் சிறந்த வஸ்துவின்மீது ஆசையினால் காண்டீவம் என்னும் திவ்யமானவில்லையும் அக்ஷயமான அவ்விரண்டு பாணப்பெட்டிகளையும் விடவில்லை. அவர்கள் அப்பொழுது எதிரில் மலையைப்போல வழியை மறைத்துக்கொண்டு புருஷவடிவத்துடன் பிரத்யக்ஷமாக நிற்கும் அக்னியைப் பார்த்தார்கள். பிறகு, அந்த அக்னிதேவன் பாண்டவர்களை நோக்கி, 'ஓ! ஓ! வீரர்களான பாண்டு புத்திரர்களே! என்னை அக்னியென்று தெரிந்துகொள்ளுங்கள். சிறந்த கைகளுள்ளவனான யுதிஷ்டிர! பகைவரை வாட்டுபவனான பீமஸேன! அர்ஜுன! வீரர்களான நகுல ஸஹதேவர்களே! என்னுடைய வார்த்தையைத் தெரிந்துகொள்ளுங்கள். கௌரவஸ்ரேஷ்டர்களே! நான் அக்னி. அர்ஜுனன் நாராயணர் இவர்களுடைய ப்ரபாவத்தால் காண்டவவனம் என்னால் எரிக்கப்பட்டது. உங்களுடைய பிராதாவான இந்த அர்ஜுனன் சிறந்த ஆயுதமான காண்டீவத்தைப் போட்டுவிட்டுக் கானகத்தில் செல்லட்டும். இதனால் ஒரு பிரயோஜனமும் இல்லை. மஹாத்மாவான கிருஷ்ணரிடத்திலிருந்த சிறந்த சக்ரமும் போய்விட்டது.. மறுபடியும், வேண்டியகாலத்தில் அவருடைய கையில் வரப்போகிறது. விற்

1. 'உதயபர்வதத்திற்கருகிலுள்ளது' என்பது பழைய உரை.

களுள் சிறந்ததான இந்தக் காண்டீவமானது முந்தி என்னால் அர்ஜுனனுக்காக வருணனிடமிருந்து கொண்டுவரப்பட்டது. இது வருணனுக்கே கொடுக்கப்படட்டும்' என்று சொன்னான். பிறகு, அந்தப் பிராதாக்களெல்லாரும் அர்ஜுனனைத் தூண்டினார்கள். அவன் அந்த வில்லையும் அக்ஷயமான இரண்டு சிறந்த பாணப்பெட்டிகளையும் ஜலத்தில் போட்டான். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, அக்னியானவன் அவ்விடத்திலேயே மறைந்துவிட்டான். பிறகு, வீரர்களான அந்தப் பாண்டவர்களும் தென்திசையை நோக்கிச் சென்றனர். பரதஸ்ரேஷ்டரே! பிறகு, அவர்கள் ஸமுத்திரத்தின் வடக்குக்கரையினாலேயே தென்மேற்றிசைக்குச்சென்றார்கள். அவர்கள் அவ்விடமிருந்து மறுபடியும் திரும்பி மேற்றிசை சென்று ஸமுத்திரத்தினால் வியாபிக்கப்பட்ட துவாரகையையும் பார்த்தார்கள். யோகதர்மத்தையுடையவர்களான பரதஸ்ரேஷ்டர்கள் பூமியைப் பிரதக்ஷிணம் செய்ய விருப்பங்கொண்டு மறுபடியும் திரும்பி வடதிசையை அடைந்தார்கள்.

## இரண்டாவது அத்யாயம்.

———:():———

(பாண்டவரும் திரௌபதியும் வரிசையாகச் செல்லும்போது ஒவ்வொருவராக விழுந்ததும், பீமன் கேட்டதுதோறும் யுதிஷ்டிரர் அவர்கள்விழக் காரணங்கூறினதும், நாய்மட்டுந் தொடர்ந்து சென்றதும்.)

பிறகு, மனத்தை அடக்கினவர்களும் யோகத்தோடு கூடினவர்களுமான அவர்கள் வடதிசை சென்று இமயமலையென்னும் பெரிய பர்வதத்தைப் பார்த்தார்கள். அவர்கள் அதையும் கடந்து சென்று [1]வாலுகார்ணவத்தைப் பார்த்தார்கள்; பர்வதங்களுள் சிறந்த மேருவென்னும் பெரிய மலையையும் பார்த்தார்கள். யோகதர்மத்தையுடையவர்களான அவர்களனைவரும் விரைந்து சென்றுகொண்டிருக்கும்போது, திரௌபதியானவள் யோகம் தவறினவளாகிப் பூமியில் விழுந்தாள். அவள் விழுந்ததைக் கண்டு, சிறந்த பலமுள்ள பீமஸேனன் திரௌபதியைப் பார்த்துவிட்டுத் தர்மராஜனை நோக்கி, 'பகைவரைத் தபிக்கச் செய்பவரே! ராஜபுத்திரியான திரௌபதியானவள் ஓர் அதர்மத்தையும் செய்யவில்லை. (அப்படியிருக்க), இவள் பூமியில் விழுந்ததற்குக் காரணம் என்ன? அதனைச் சொல்லும்' என்று வினவினான்.

1. கடல் போன்ற பெரிய மணல் மேடு.

யுதிஷ்டிரர், 'புருஷஸ்ரேஷ்டனே! இவளுக்கு அர்ஜுனனிடத்தில் மிக்க அதிகமான விஸ்வாஸம் உண்டு. அதனுடைய பயனை இதை இவள் இப்பொழுது அனுபவிக்கிறாள்' என்று சொன்னார். பரதர்களுள் மிகச்சிறந்தவரும் புத்திசாலியும் தர்மாத்மாவும் புருஷஸ்ரேஷ்டருமான யுதிஷ்டிரர் இவ்விதம் சொல்லிவிட்டு அவளைப்பாராமல் மனத்தை அடக்கிக்கொண்டு சென்றார். பிறகு, வித்வானான ஸஹதேவன் பூமியில் விழுந்தான். அவனும் விழுந்ததைப் பார்த்துப் பீமஸேனன் அரசரை நோக்கி, 'எவன் நம்மனைவர்களுக்கும் பணிவிடை செய்துகொண்டு அஹங்காரமற்றவனாக இருந்தானோ மாத்ரீ புத்திரனான அந்த ஸஹதேவன் என்ன காரணத்தினால் பூமியில் விழுந்தான்?' என்று வினவினான். யுதிஷ்டிரர், 'இவன் ஒருவனையும் தனக்குச் சமமான பண்டிதனாக நினைக்கவில்லை. அந்தத் தோஷத்தினால் வித்வானும் ராஜகுமாரனுமான இவன் விழுந்தான்' என்று கூறினார். குந்தியின் குமாரரான யுதிஷ்டிரர், அப்பொழுது, இவ்விதம் சொல்லி அந்த ஸஹதேவனை விட்டுவிட்டுப் பிராதாக்களுடனும் நாயுடனும் கூடவே சென்றார். திரௌபதியும் பாண்டவனான ஸஹதேவனும் விழுந்ததைப் பார்த்து மனவருத்தமுற்றவனும் பந்துக்களிடத்தில் பிரியமுள்ளவனும் சூரனுமான நகுலன் விழுந்தான். வீரனும் அழகிய காட்சியுள்ளவனுமான அந்த நகுலன் விழுந்தவுடன், பீமஸேனன் அப்பொழுது மறுபடியும் யுதிஷ்டிரராஜரை நோக்கி, 'சிறந்த தர்மபுத்தியுள்ளவனும் பிராதாவும் சொல்வதைச்செய்பவனும் உலகத்தில் ஒப்பற்றஅழகுள்ளவனுமான நகுலன் பூமியில் விழுந்து விட்டான்' என்று சொன்னான். நகுலனைப்பற்றிப் பீமஸேனனால் இவ்விதம் சொல்லக்கேட்டவரும் தர்மாத்மாவும் எல்லா அறிஞருள்ளும் சிறந்தவருமான யுதிஷ்டிரர், 'பீமஸேன! அழகில் எனக்குச் சமமானவன் ஒருவனும் இல்லை. நான் ஒருவனே மேலானவன்' என்று இவனுடைய மனத்தில் எண்ணம் இருந்தது. ஆகையினால், நகுலன் விழுந்தான். நீ வா. வீரனே! எவன் எதைச் செய்தானோ அவன் அதை அவச்யம் அனுபவிப்பான்' என்று மறுமொழி கூறினார். பாண்டுவின் குமாரனும் வெள்ளைக்குதிரைகளுள்ளவனும் சத்துரு வீரர்களை அழிப்பவனுமான அர்ஜுனன் விழுந்தவர்களான அவர்களைப் பார்த்து, சோகத்தால்வாட்டமுற்று உடனே (தானும்) விழுந்தான். புருஷஸ்ரேஷ்டனும் இந்திரனுடைய பராக்ரமம் போன்ற பராக்ரமமுள்ளவனும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவனுமான அந்த அர்ஜுனன் விழுந்து மரிக்கும்போது, பீமஸேனன் அரசரை நோக்கி, 'மஹாத்மாவான இவன்

விளையாட்டு ஸமயங்களிலும் பொய் சொன்னதாக எனக்கு நினைவில்லை. அவ்வாறிருக்க, இவன் பூமியில் விழுந்தது எதனுடைய காரியம்?' என்று வினவினான். யுதிஷ்டிரர், 'அர்ஜுனன், 'நான் ஒருவனாகவே பகைவர்களை எதிர்த்து விடுவேன்' என்று சொன்னான். தான் சூரனென்று எண்ணங்கொண்ட இவன் அவ்வாறு செய்யவில்லை ஆகையினால், விழுந்தான். இந்த அர்ஜுனன் எல்லா வில்லாளிகளையும் அவமதித்தான். ஆகையினால், க்ஷேமத்தை விரும்புகிறவனால் இது அவ்வாறு செய்யத்தக்கதன்று' என்று சொன்னார். யுதிஷ்டிரராஜர், இவ்வாறு சொல்லிவிட்டுச் சென்றார். பிறகு, பீமஸேனன் விழுந்தான். விழுந்தவனான பீமஸேனன், தர்மராஜரான யுதிஷ்டிரரை நோக்கி, 'ஓ! ஓ! ராஜரே! பாரும். உமக்குப்பிரியனான நான் விழுந்துவிட்டேன். நான் விழுந்ததற்கு என்ன காரணம்? நீர் அறிவீரானால் சொல்லும்' என்று வினவினான். யுதிஷ்டிரர், 'குந்தியின் மைந்தனே! நீ அதிகமாகப் போஜனம் செய்தாய். பலத்தால் பிறனை மதியாமல் தற்புகழ்ச்சி செய்துகொண்டாய். அதனால், பூமியில் விழுந்தாய்' என்று சொன்னார். சிறந்த கைகளுள்ளவரான யுதிஷ்டிரர் இவ்விதம் சொல்லிவிட்டு அவனையும் பாராமல் சென்றார். என்னால் உமக்குப் பலமுறை சொல்லப்பட்டதான நாய் ஒன்றே பின் சென்றது.

## மூன்றாவது அத்யாயம்.

—:o:—

(இந்திரன் யுதிஷ்டிரரை ஸ்வர்க்கம் செல்லத் தன் தேரில் ஏறச்சொல்லியதும், யுதிஷ்டிரர் நாயை விட மறுத்ததும், யமன் அவரைப் புகழ்ந்ததும், யுதிஷ்டிரர் ஸ்வர்க்கத்தில் பீமன் முதலியோரைக் காணமல் அவர்களிருக்குமிடம் செல்ல விரும்பியதும்.)

பிறகு, இந்திரன், ஆகாயத்தையும் பூமியையும் முழுதும் ஒலிக்கும்படி செய்துகொண்டு ரதத்துடன் அருகில் வந்து குந்தியின் குமாரரான அந்த யுதிஷ்டிரரை, '(ரதத்தில்) ஏறும்' என்று சொன்னான். தர்மராஜரான யுதிஷ்டிரர், விழுந்தவர்களான தமது பிராதாக்களைப் பார்த்துச் சோகத்தால் வாட்டமுற்று இந்திரனை நோக்கி, 'தேவேந்திர! என்னுடைய பிராதாக்கள் இங்கு விழுந்துவிட்டார்கள். அவர்கள் என்னுடன் வரவேண்டும். பிராதாக்களின்றி ஸ்வர்க்கம் செல்ல எனக்கு விருப்பமில்லை. புரந்தர! ஸுகுமாரியும் ஸுகத்தைப் பெறத்தகுந்தவளுமான அந்த ராஜபுத்திரியும் எங்களுடன் வரவேண்டும். அதை நீ அங்கீகரிக்கவேண்டும்' என்ற இந்த வசனத்தைச் சொன்னார். இந்திரன், 'பரதஸ்ரே

ஷ்டரே! திரௌபதியுடன் முந்தியே ஸ்வர்க்கம் சென்றிருக்கும் எல்லாப் பிராதாக்களையும் நீர் ஸ்வர்க்கத்தில் பார்ப்பீர். நீர் துயரப்பட வேண்டாம். பரதஸ்ரேஷ்டரே! அவர்கள் மானிட சரீரத்தை (இங்கு)ப் போட்டுவிட்டு ஸ்வர்க்கம் சென்றார்கள். நீர் இந்தச் சரீரத்துடனேயே ஸ்வர்க்கம் செல்வீர்; ஸந்தேகமில்லை' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'சென்றவைகளுக்கும் வருபவைகளுக்கும் ஈசனே! இந்த நாயானது எப்பொழுதுமே என்னிடத்தில் பக்தியுள்ளது. இதுவும் என்னுடன் வரவேண்டும். என்னுடைய புத்தி இரக்கமுள்ளதன்றோ?' என்று சொன்னார். இந்திரன், 'ராஜரே! நீர் தேவத்தன்மையையும் எனக்கு ஸமமான நிலைமையையும் எல்லாச் செல்வத்தையும் சிறந்த ஸித்தியையும் ஸ்வர்க்க ஸுகங்களையும் இப்பொழுது அடைந்திருக்கிறீர். நாயை விட்டுவிடும். இதில் (உமக்குக்) கருணையின்மையென்பதில்லை' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'ஆயிரம் கண்களுள்ளவனே! மேன்மை பெற்றவனே! மற்றவனால் செய்யக்கூடிய இழிவான இந்தக் காரியம் மேன்மைபெற்ற என்னால் செய்யமுடியாதது. எந்தச் செல்வத்தினிமித்தம் அன்புள்ள பிராணியை நான் விடவேண்டுமோ அந்தச் செல்வத்துடன் எனக்குச் சேர்க்கை வேண்டாம்' என்று சொன்னார். இந்திரன், 'ஸ்வர்க்கலோகத்தில் நாயுள்ளவர்களுக்கு இடமில்லை. குரோதவசர்களென்னும் ராக்ஷஸர்கள் (அசுத்தர்களின்) யாகம் தடாகப் பிரதிஷ்டை முதலியவற்றின் பயனை அபஹரிக்கின்றனர். தர்மராஜரே! ஆகையால், ஆலோசித்துச் செய்யும். நாயைவிட்டுவிடும். இதில் குரூரத்தன்மையில்லை' என்று கூறினான். யுதிஷ்டிரர், 'மஹேந்திர! உலகத்தில் பக்தனைவிடுவது மிக்க பாவமென்றும் பிரம்மஹத்திக்குச் சமமானதென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால், நான் என் ஸுகத்தை விரும்பி இந்த நாயை இப்பொழுதும் எக்காலத்திலும் எவ்விதத்திலும் விடமாட்டேன். பயந்தவனையும் பக்தனையும் துன்பமுற்றவனையும் வேறு கதி இல்லையென்று வந்தவனையும் மெலிந்தவனையும் உயிரை ரக்ஷித்துக்கொள்ள விருப்பமுள்ளவனையும், நான் உயிரை விடும்படி நேர்ந்தாலும், விட முயலவேமாட்டேன். இது எனக்கு நித்யமான விரதம்' என்று சொன்னார். இந்திரன், 'மூடாமல் நாயினால் பார்க்கப்பட்ட தானத்தையும் யாகத்தையும் ஹோமத்தையும் குரோதவசர்கள் அபஹரிக்கின்றனர். ஆகையினால், இந்த நாயை விட்டுவிடும். நாயை விட்டால் தேவலோகத்தை அடைவீர். வீரரே! பிராதாக்களையும் பிரியமனைவியான திரௌபதியையும் விட்டுவிட்டு உம்முடைய கர்மாவினால் (இந்த) உலகம் உம்மால் அடையப்பட்டது. இந்த

நாயை ஏன் விடுகிறீரில்லை? எல்லாவற்றையும் தியாகம் செய்துவிட்டு இப்பொழுது மதிமயக்கம் கொள்ளுகிறீர்' என்று சொன்னான். யுதிஷ்டிரர், 'இறந்த மனிதர்களுடன் நட்பும் பகையும் இல்லை என்பது உலகங்களில் நிச்சயம். (இறந்தவர்களான) அவர்களை உயிருள்ளவர்களாகச் செய்ய என்னால் இயலாது. ஆகையால், அவர்களை விட்டேன். உயிருள்ளவர்களை நான் விடவில்லை. இந்திர! சரணமடைந்தவனை ரக்ஷியாமை, ஸ்திரீயைக் கொல்லுவது, பிராம்மணருடைய பொருளை அபஹரிப்பது, மித்திரனுக்குத் துரோஹம் செய்வது இந்த நான்கும் பக்தனை விடுவதும் ஸமமானவையென்பது என்னுடைய கொள்கை' என்று சொன்னார். தர்மராஜருடைய அந்த வார்த்தையைக் கேட்டுத் தர்மஸ்வரூபியான பகவான் ஸந்தோஷமடைந்து யுதிஷ்டிரராஜரை நோக்கி ஸ்தோத்திரத்துடன்கூடின இனிமையான வாக்கியங்களைச் சொல்லத் தொடங்கினார். 'ராஜேந்திர! பாரத! தந்தையான பாண்டுவுக்கேற்ற நடையினாலும் மேதையினாலும் எல்லாப் பிராணிகளிடத்திலுமுள்ள இந்தக் கருணையினாலும் நீ நற்குலத்தில் பிறந்தவன். புத்திரனே! முந்தி நீ என்னால் த்வைதவனத்திலும் தீர்த்தத்திற்காகச் சென்ற உன்னுடைய பிராதாக்கள் கொல்லப்பட்டிருந்தபொழுது பரீக்ஷிக்கப்பட்டாய். அப்பொழுது, நீ இரண்டு தாயார்களும் ஸமமாக இருக்கவேண்டுமென்றெண்ணிப் பீமஸேனன் அர்ஜுனன் என்னும் இரண்டு ஸஹோதரர்களையும் விட்டு நகுலன் ஜீவிக்கவேண்டுமென்று விரும்பினாயல்லவா? இந்த நாய் பக்தன் என்று எண்ணி நீ தேவரதத்தை இவ்விதம் விட்டாயே. ஆகையால், ஸ்வர்க்கத்தில் உனக்குச் சமமான அரசன் ஒருவனுமில்லை. பாரத! ஆகையால், உனக்கு உன் சரீரத்துடனேயே அக்ஷயமான உலகங்கள் கிடைக்கட்டும். பரதஸ்ரேஷ்டனே! திவ்யமும் மிகச்சிறந்ததுமான கதியை அடைந்தாய்' என்று சொன்னார். பிறகு, தர்மமும் இந்திரனும் மருத்துக்களும் அஸ்வினீதேவர்களும் தேவர்களும் தேவரிஷிகளும் யுதிஷ்டிரரை ரதத்தில் ஏற்றிவைத்துவிட்டு, ஸித்திபெற்றவர்களும் இஷ்டப்படி ஸஞ்சரிப்பவர்களும் பாபமற்றவர்களும் புண்யமுள்ளவர்களும் புண்யமான வாக்கும் புத்தியும் செய்கையுமுள்ளவர்களுமான அவர்களெல்லாரும் தம் விமானங்களோடு சென்றார்கள். குருகுலஸ்ரேஷ்டரான அந்த யுதிஷ்டிரராஜர் அந்த ரதத்தில் ஏறிக்கொண்டு தேஜஸினால் ஆகாயத்தையும் பூமியையும் நிரப்பிக்கொண்டு வேகமாக மேலே சென்றார்.

பிறகு, தேவலோகத்திலிருப்பவரும் எல்லா உலகங்களையும் அறிந்த

வரும் பெரிய விஷயத்தைச் சொல்பவரும் பெரிய தவமுள்ளவருமான நாரதரானவர் அப்பொழுது உரக்கச் சொல்லலானார். 'முன்னோர்களான ராஜரிஷிகளையும் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். கௌரவராஜரான யுதிஷ்டிரர் அவர்களுடைய கீர்த்தியை மறைத்துவிட்டு மேன்மை பெற்றிருக்கிறார். பாண்டவரைத்தவிர, மற்றவன் கீர்த்தியினாலும் பிரதாபத்தினாலும் நல்லொழுக்கமென்னும் செல்வத்தினாலும் உலகங்களைச் சூழ்ந்துகொண்டு தன் சரீரத்துடன் (இங்கு) வந்ததாக நாம் கேட்கவில்லை. பிரபுவே! நீர் பூமியிலிருக்கும்பொழுது பூமியில் தேவர்களுக்கு ஆலயங்களான எந்தத் தேஜஸுகளைப் பார்த்தீரோ அவைகளை ஆயிரக்கணக்காகப் பாரும்' என்று சொன்னார். நாரதருடைய வார்த்தையைக் கேட்டுத் தர்மாத்மாவான யுதிஷ்டிரராஜர், பிராதாக்களையும் தம்மைச் சார்ந்த அரசர்களையும் பாராமல், 'என்னுடைய பிராதாக்களுக்கு இப்பொழுது எந்தஸ்தானமோ அது நல்லதோ கெட்டதோ, அந்தஸ்தானத்தையே நான் அடையவிரும்புகிறேன். மற்ற உலகங்களை நான் விரும்பவில்லை' என்று சொன்னார். யுதிஷ்டிரராஜருடைய வார்த்தையைக் கேட்டுத் தேவராஜனான புரந்தரன் கருணையுடன் கூடின அவரை நோக்கி மறுமொழி கூறலானான். 'ராஜச்ரேஷ்டரே! நீர் புண்ய கர்மங்களால் ஜயித்ததான இவ்விடத்திலேயே வாஸம் செய்யும். நீர் மானிடப்பிறவியிலிருந்த ஸ்நேஹத்தை இப்பொழுதும் ஏன் பற்றுகிறீர்? குருநந்தனரே! எக்காலத்திலும் வேறு மனிதன் அடையாத மேலான ஸித்தியை நீர் அடைந்தீர் உம்முடைய பிராதாக்கள் (இவ்விதமான) ஸ்தானத்தை அடையவே இல்லை. நராதிபரே! இப்பொழுதும் உம்மை மானிடஸ்வபாவம் தொடுகிறது. இது ஸ்வர்க்கம். தேவலோகவாஸிகளான தேவரிஷிகளையும் ஸித்தர்களையும் பாரும்' என்று சொன்னான். புத்திமானான யுதிஷ்டிரரோ, இவ்விதம் சொல்லுகின்றவனும் ஈச்வரனுமான தேவேந்திரனை நோக்கி மறுபடியும் அர்த்தமுள்ள பின்வரும் வசனத்தைச் சொன்னார். 'அஸுரர்களைக் கொல்பவனே! அவர்களில்லாமல் இங்குவஸிக்க எனக்குப் பிரியமில்லை என்னுடைய பிராதாக்கள் எங்கு சென்றிருக்கிறார்களோ, கருமை நிறமுள்ளவளும் புத்தி நல்லஸ்வபாவம் குணம் இவைகளுடன் கூடினவளும் ஸ்திரீகளுள் சிறந்தவளுமான அந்தத் திரௌபதியானவள் எவ்விடத்தில் இருக்கிறாளோ, என்னுடைய புத்திரர்களும் எவ்விடத்தில் இருக்கிறார்களோ அவ்விடம் செல்ல நான் விரும்புகிறேன்' என்று சொன்னார்'' என்று கூறினார்.

## மஹாப்ரஸ்தானிகபர்வம் முற்றிற்று.